உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ் அநுபந்தம்

மலர் 30] விரோதிகிருது - கார்த்திகை - 19—11—71 [இதழ் 12



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
பரிபூரணம் (10—11—71)

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - கார்த்திகை – 19–11–71 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருவருள் அழைப்பு

ஞானப்பண்ணை :

செந்தமிழ் நாட்டின் திருவருட் கருவூலமாய் விளங்கி ஞான ஒளி பரப்பித் திகழ்வது திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம். இதன் ஞானபீடத்தை நிறுவி அருள் விளக்கங் கண்டு, ஆலவாய்ச் சொக்கனை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பெற்றவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். அவர்தம் அருள்விளக்கம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள் முதலாக இன்றுகாறும் வழிவழி உலகெங்கும் விளங்கி வருகிறது. ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்த மகாசந்நிதானங்களால் குறிப்பிடத்தக்க அருஞ்செயல்கள் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன என்பது உலகறிந்த உண்மை.

ஞானப் பண்ணையாம் தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 20—5—1945-ல் அருளாட்சி ஏற்றருளினர்கள். மானிட யாக்கையில் காணுதற்கு இயலாதது எனும் திருக்கயிலாயத்தை, யாத்திரை மேற்கொண்டு

தரிசித்த திருவருள் வாய்க்கப் பெற்றவர்கள். இமயப் பெருந் தலங்களையும், ஜோதிர்லிங்கத் தலங்களையும், பாடல்பெற்ற சிவதலங்களையும் தரிசித்து மகிழ்ந்தவர்கள். இவர்களது அருளாட்சிச் சிறப்புக்களை உணர்ந்த அன்பர்கள் 12—3—1961 இல் இவர்களுக்குக் கனகாபிஷேகம் சிறப்புறச் செய்வித்து மகிழ்ந்தார்கள்.

அளப்பில் அறங்கள் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் சைவத்திற்கும் தமிழிற்கும் செய்தருளிய பணிகள் அளவற்றன. தருமையில் பல்கலைக் கல்லூரியும் - உயர்நிலைப்பள்ளியும் அமைத்தார்கள். மாயூரத்தில் மகளிர் கல்லூரி தொடங்கப் பெருங்கொடை வழங்கினார்கள். பல இடங்களில் கல்லூரி - உயர்பள்ளி மாணவர்களுக்காகப் பரிசுத் திட்டங்கள் பல அமைத்தார்கள். தாம் கனகாபிஷேகம் கொண்டருளியதன் நினைவாகச் சைவசித்தாந்தக் கல்லூரி ஒன்றை அமைத்துச் சிறப்பித்தார்கள்.

பன்னிரு திருமுறைகளையும் உரையுடன் வெளியிட அருள் பாலித்தார்கள். சாத்திர நூற்களையும், திருக்குறள் உரைவளத்தையும் சிறப்புற அச்சிட்டு வழங்கியருளினார்கள். திங்கள் ஏடான எங்கள் ஞானசம்பந்தத்தின் வளர்ச்சியில் பேரீடுபாடு காட்டினார்கள்.

தருமையில் சமயாசாரியர்கள் திருப்பெயரில் நிலையங்கள் அமைத்தல், மாயூரத்தில் ஸ்ரீ சண்முகதேசிகர் மகப்பேறு மருத்துவமனை அமைத்தல் - சிவதல யாத்திரை நினைவு வளைவுகள் அமைத்தல், ஆதீனத் திருமுகப்பில் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றமும், விருந்தினர் மாளிகையாக ஸ்ரீசண்முகநிலையமும் அமைத்தல், பதினெண் திருக்கரத்தோடு ஸ்ரீ துர்க்காதேவியையும் – ஸ்ரீ வனதுர்க்கா தேவியையும் எழுந்தருளச் செய்தல் போன்ற பலவற்றை இவர்கள் அருளாட்சியில் தருமை பெற்றுச் சிறந்தது.

பதினெட்டுக் கரங்களோடு கூடிய மகாலட்சுமி துர்க்கையை ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி யவர்கள்தாம் முதன்முதலாக, ஆகமங்களின் அடிப்படையில் பிரதிஷ்டை செய்தார்கள். உலகிலேயே முதன் முதல் இவர்கள் செய்வித்த இத் துர்க்காதேவி வழிபாடு, சேரன் செங்குட்டுவன் முதன்முதலாகச் செய்த பத்தினிக் கடவுள் பிரதிஷ்டை போன்ற சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் உடையது என்பது யாவரும் மறக்க வியலாத ஒன்றாகும்.

தருமையின் அருளாட்சிக் குட்பட்ட 27 திருக்கோயில்களையும் புதுப்பித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்ததோடு, இறைவர் திருமேனிகளுக்குப் பொன்னாலும் - மணியாலும் ஆபரணங்களும், மற்றும் வாகனங்களும், எடுபிடிகளும் செய்வித்தருளினார்கள். சென்னையில் சமயப்பிரசார நிலையமும், திருக்கோயில்களில் யாத்திரீகர் தங்கும் விடுதிகளும், வேலூரில் சித்த வைத்திய சாலையும், அனாதை ஆஸ்ரமும், பல கட்டளை மடங்களும் அமைத்தருளியதோடு, நாட்டுநடப்புக்களையொட்டிப் பெருந்தொகைகளை அவ்வப்போது நிதியுதவியாக வழங்கியருளினார்கள். ஆண்டு தோறும் ஆவணி மூலத் திருநாளில் பட்டமளித்தலும், திருமடத் துத்தலைவர்களை ஒன்றுபடுத்தி இணைத்து, தெய்வீகப் பேரவை காணப் பேருதவி செய்து முதல் தலைவராகப் பொறுப்பேற்றமையும் குறிக்கத்தக்க பெருஞ்சிறப்பாகும்.

திருவருள் அழைப்பு :

இத்தகு பெருஞ் சிறப்புப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவருட் செயலின் விளைவுகளைப் பற்பல நிகழ்ச்சிகள் வாயிலாகக் கண்டு மகிழ்ந்தவர்கள். இருபத்தாறு ஆண்டு அருளாட்சிக்குப் பிறகு இவர்களை இறைவன் தனது திருவடிக்கு அழைத்துக் கொண்ட நிகழ்ச்சியும் திருவருள் அழைப்பான ஒரு வியக்கத்தக்க நிகழ்ச்சியாகவே அமைந்தது.

ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகளை மேலைக்கடற் கரையில் உள்ள திருவஞ்சைக் களத்தில் தரிசனம் செய்து கொண்டிருந்த காலத்தில், இறைவன் சிவகணங்களுடன் வெள்ளானையை அனுப்பித் தனதுதிருக்கயிலாயத்திற்கு அழைத்துக்கொண்டான். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளானை மீது செல்லும் போது 'தானெனை முன் படைத்தான்' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்துகொண்டே 'இந்திரன் மால் பிரமன் எழில் ஆர் மிகு தேவரெல்லாம் வந்தெதிர் கொள்ள' - திருக்கயிலாயத்தை அடைந்தார்கள். தம் கெழுதகு நண்பரான சேரமான் பெருமாள் நாயனாரின் பேரன்பினையும் நினையாது, தாம் புறப்பட்டுவந்த திருக்கயிலையில் இருந்து இறைவன் அருள் அழைப்பு வந்தவுடன் கயிலாயநாதனே நெஞ்சில் நிறைய நிலவுலக இன்பங்களையெலாம் உதறிவிட்டுப் புறப்பட்ட ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருள் வரலாறு, ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் பரிபூரணம் எய்திய நிகழ்ச்சியில் விளங்கித் தோன்றி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. திருச்செந்தூர்ப் பதியில் அருளழைப்பு வந்தவுடனேயே அடியார்களையும், அன்பர்களையும், அருளாட்சி புரிந்த ஆதீனத்தையும் சற்றும் நினையாது கயிலாயநாதன் திருவடி

சேர்ந்தமை ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கயிலாய யாத்திரையை நமக்கு நினைவூட்டுகின்றது.

காசி யாத்திரை :

ஸ்ரீ கந்த சஷ்டி விழாவை ஒட்டி ஆண்டுதோறும் திருச்செந்தூருக்குச் செல்லும் வழக்கப்படி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இவ்வாண்டும் எழுந்தருளினர்கள். கந்தவிரதத்தை மேற்கொண்டிருந்த காலத்திலேயே காசிக்குச் செல்ல வேண்டுமென்ற சிந்தனையை இறைவன் திருவுள்ளத்தில் தோற்றியருளினன். திருச்செந்தூரிலிருந்து தருமை மீண்டவுடனேயே காசிக்கு எழுந்தருள இருப்பதைத் திருவுளம்பற்றிப் பலர்க்கும் அருள்ஆணை தந்து அடுத்த கிழமையிலேயே காசி யாத்திரையை மேற்கொண்டார்கள்.

10—11—71 புதன் கிழமை அன்று காலை காசியை அடைந்தருளினர்கள். அங்கு ஸ்ரீ குமாரசாமி மடத்தில் எழுந்தருளியிருந்தபோது, தருமையாதீனத்தின்10 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள் செய்த அருட்பாக்களில், தாரகப்பத்தினை ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு பாடச்செய்து - பொருள் விரித்து பகல் மூன்று மணிவரை சிவசிந்தனையில் ஈடுபட்டிருந்தார்கள்.

உளங்கவர்ந்த பாடல் :

“ மின்னும் உத்தரீ கத்தை வீசும் விசாலாட்சி பங்கன்
தன்னிகராம் காசியில் வாழ் சற்குருமுன் சென்றெனக்கு
உன்னுமொரு தாரகத்தை ஓதுநாள் என்றென்று இங்கு
அன்னமே கேட்டுவந்தென் அகமகிழ விளம்புவையே. ”

“ வெயிலும் இரவியும் போல் விசாலாட்சியம்மை பங்கன்
கயிலாயன் காசியில்வாழ் கண்ணுதல்பாற் சென்றெனக்குள்
உயிராகும் தாரகத்தை ஓதுநாள் என்றென்று
மயிலே நீ கேட்டுவந்தென் மனமகிழ விளம்புவையே.”

என்ற பாடல்கள் அவர்கள் திருவுள்ளத்தில் நெகிழ்வை உண்டாக்கின.

“ பவமெனும் சாகரத்து ஆக்கையெனும் ஒட்டையாம்
படகின்மேல் ஏறிநிற்பேன்
பரையருட் காற்றின்றியே பிணிச்சுழலினுட்
பட்டுத் திகை தப்பியே

கவலைகள் வாராமலே கௌரியுன் கரகம்ப
காருண்ய உத்தரீயக்
காற்றிறைவர் தாரகச் சத்தமொ டெறிந்தருட்
காசியூர் ஆனந்தமாம்
சிவமெனும் கரை துறையி லேறவருள் எண்ணிலாச்
செகதண்ட மீருதுவைத்துட்
சிறைக்கர மணைக்கு மயிலே நானெனும் சிறிய
செந்துக்கும் அஞ்சலென்பாய்
அவனவளொடு அதுவெனும் சிவகோடிகளின் மர
ணந்தத்தில் அஞ்சலென்பாய்
அண்டகோடிகள் பணி அகண்டபூரணி யென்னும்
அன்னபூரணி அன்னையே.''

என்ற பாடலும், அதன் உட்பொருளும் அவர்கள் திருவுள்ளத்தில் நீங்கா இடம்பெற்றிருந்தன.

பரிபூரணம் எய்தியமை :

பிற்பகல் 4 மணி அளவில் உடல் நலங்குன்றியதுபோலக் காணப்பட்டார்கள். தக்க மருத்துவர்களை அழைத்தும் பலவகையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. இரவு 7-30 மணி அளவில் கயிலைப் பெருமான் இவர்களைத் திருவடிப் பேற்றுக்கு அழைக்க, இறைவன் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே சுத்தாத்வைத சைவசித்தாந்த பரமுத்தி நிலையாகிய பரிபூரண நிலை எய்தினர்கள். பரிபூரணம் அடைந்த செய்தி திருப்பனந்தாள் காசிமடத்திற்கும், தருமைக்கும், சென்னை நிலையத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்சுவாமிகள் அவர்களுக்கும் தொலைபேசி வழி தெரிவிக்கப் பெற்றது. பிற ஆதீனங்களுக்கும் திருக்கோயில்களுக்கும் அங்கிருந்து செய்தி அறிவிக்கப்பெற்றது.

திருமேனி வருகை :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருமேனி விமானம் மூலம் 11—11—71 வியாழன் மாலை 6 மணி அளவில் சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டது. விமானமூலம் கொண்டுவருவதற்கு காசியில் ஸ்ரீ குமாரசாமிமடம் ஏஜண்ட் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை, காஞ்சி காமகோடி பீடம் ஏஜண்ட் திரு. செல்வம் அய்யர், சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் முதலியோர் பெரிதும் உதவினர். காசி நகர போலீஸ், மற்றும் அதிகாரிகள் பேரீடுபாட்டுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி

அவர்களின் திருமேனியை எடுத்து வருவதற்கு மிகவும் உதவிய தோடு, அதனைக் கிடைத்தற்கரிய பாக்கியமாகவும் புண்ணிய கைங்கரியமாகவும் கருதினர். விமான நிலைய அதிகாரிகள் ஒவ்வோரிடத்திலும் ஈடுபாட்டுடன் உதவி செய்தனர். விமானம் அங்கங்கிருந்து புறப்படும் காலத்தும் வந்து இறங்கும் காலத்தும் இடையருது சோக கீதங்களை ஒலிபரப்பித் தங்கள் மரியாதையை அவர்கள் தெரிவித்துக் கொண்டனர். சென்னை சமயப் பிரசார நிலையம் ஸ்ரீமத் தம்பிரான்சுவாமிகள் அவர்களும், மற்றும் உயர்நீதிமன்ற நடுவர்கள், பொள்ளாச்சி தொழிலதிபர் திரு. N. மகாலிங்கம் அவர்களும், மற்றும் அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், அதிகாரிகள், இந்து சமய அறநிலைய அதிகாரிகள் முதலிய பெருமக்கள் பலரும் ஆயிரக்கணக்கில் விமான நிலையத்திற்கு வந்திருந்து மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினர். தமிழ் நாட்டு முதலமைச்சர் சார்பாகக் காட்டூர் திரு. கே. வி. இராமையா முதலியார் அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள்சார்பில் அவரது நேர்முக உதவியாளரும், நெடுங்காடு சுந்தரேச முதலியார் அவர்களும் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருமேனி அன்றிரவு 1½ மணியளவில் தருமைக்குக் கொண்டுவரப்பட்டது. வரும் வழியில் பாண்டிச்சேரி, சிதம்பரம், சீகாழி, வைத்தீஸ்வரன் கோயில் போன்ற இடங்களில் நள்ளிரவில் கொட்டும் மழை என்றும் பாராது திரளான அன்பர்கள் கூடி நின்று மலர் மாலைகள் அணிவித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்குத் தங்கள் இறுதி மரியாதையினைத் தெரிவித்துக் கொண்டார்கள், தருமையில் தரங்கம்பாடி சாலையிலுள்ள சண்முகம் வளைவிலிருந்து திருமடத்திற்கு உரிய மரியாதைகளுடன் கொண்டுவரப் பெற்று, சித்திராசனத்தில் எழுந்தருளுவித்துத் தீபாராதனை செய்வித்து அன்பர்கள் தரிசனத்திற்கு ஏற்ற வகையில் எழுந்தருளுவிக்கப்பெற்றது.

புதிய பட்டம் ஏற்பாடு :

11—11—71 அன்று மாலை 4 மணி அளவில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள், திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், இளவரசு ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆகியோர் தருமைத் திருமடத்துக்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள், இளவரசு சுவாமிகள் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் முதலியோருடன் கலந்து

அடுத்த பட்டத்திற்குரியவரைத் தேர்ந்தெடுக்க முனைந்தனர். மகாசந்நிதானத்தில் அடுத்தபட்டத்துக்குரியவரைத் தீர்மானிக்க இயலாவிட்டால், ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அத்திருக்கூட்டத்தில் எல்லாவகையிலும் தகுதிபெற்ற அடியவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது மரபு. அவ்விதமே ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருமுன்பு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் எல்லோரும் ஒன்று கூடி வழிபாடியற்றி, திருமடத்துமேலாளர், தலைமைமேற்பார்வையாளர் முதலியோர் உடனிருக்க, சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களை 26ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளச்செய்வதென்று ஒருமனதாகத் தீர்மானித்தனர்.

ஞானபீடம் ஏற்றல் :

இதற்கிணங்க இந்த ஆதீன சம்பிரதாயப்படி 12—11—71 அன்று [காலை 8 மணி அளவில் ஸ்ரீமத் மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு ஞானபிஷேகம் செய்து, தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற திருநாமமும் சூட்டுவிக்கப்பெற, சுவாமிகள் 26 ஆவது குருமகாசந்நிதானமாக ஞானபீடாதிபத்யத்தை ஏற்றருளினர்கள்.

இந்த வைபவ காலத்தில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், திருவாவடுதுறை ஆதீனம் பிரதிநிதியாக மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஆதீன அடியவர்களும், பெருமக்களும், பொதுமக்களுமாக ஆயிரக்கணக்கில் அன்பர்கள் கூட்டம் கண்டு மகிழ்ந்தது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருமேனி அடக்கம் :

காலை 10 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருமேனி அபிஷேக ஆராதனை செய்விக்கப்பெற்று திருவீதி வலம் செய்வித்து, மேலவீதியில் உள்ள, ஆநந்த பரவச தேசிகர் குருமூர்த்த ஆலயத்தின் அருகில் குருமூர்த்தமாக எழுந்தருளுவிக்கப் பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் உரிய மரியாதையாகப் பொன்னுடை

போர்த்தப்பெற்றது. ஸ்ரீகாசி மடம், குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம், பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்கசுவாசிகள்மடாலயம், கோவை கௌமார மடாலயம் தலைவர்கள் முதலியோர் நேரில் பொன்னாடைகளும் மலர் மாலைகளும் அணிவித்தனர். புதுவை ஆளுநர் மேதகு திரு. B. D. ஜட்டி அவர்கள், அவரது நேர்முகஉதவியாளர் ராமு, காரைக்கால் நிர்வாகி ஸ்ரீ தயாளு, தஞ்சை மாவட்டக் கலெக்டர்திரு. T. V. அந்தோணி, கீழத்தஞ்சை போலீஸ் சூப்பரிண்டெண்டெண்டு திரு. ஐசக் தேவாரம், தஞ்சை இந்து அறநிலையத் துணை ஆணையர். திரு. S. கோதண்டபாணி B. Sc., B. L. அவர்கள், கும்பகோணம் உதவி ஆணையர் திரு. அர்ஜுனன் முதலியோரும் மாயூரம் டிப்டி கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளும் வெளியூர்ப் பேரன்பர்களும் சிதம்பரம் டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள், டாக்டர், திரு. நடராசன் அவர்கள், மாயூரம் ஏனுதிமங்கலம், திரு. என். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், திருக்கடவூர் பிச்சக்கட்டளை திரு. கே. கனகசபைப் பிள்ளை அவர்கள் சிதம்பரம் திரு. பொன்சொக்கலிங்கம் M. L. A. செம்பொனார்கோயில் திரு. சம்பத்து M. L. A திருச்சி திரு. G வரதராஜப்பிள்ளை, மதுரை திரு, ம. க. சுந்தரேசபட்டர், மாயூரம், பெருமக்களான திரு. R K. சுப்பிரமணியபிள்ளை, திரு. விஸ்வநாத முதலியார், திரு. A. ரெத்தினம் செட்டியார், அ. வ. அ. கல்லூரி கரஸ்பாண்டெண்ட், திரு. பாலசுப்பிரமணியம், கல்லூரி முதல்வர் திரு. M. விஸ்வநாதன், புகழ்பெற்ற சினிமா டைரக்டர் திரு. K. S. கோபாலகிருஷ்ணன், மாயூரம் பத்திரிகை நிருபர்கள் முதலிய பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் நூற்றுக் கணக்கான மலர் மாலைகளும், மலர் வளையங்களும் இட்டு மரியாதை செலுத்திக்கொண்டார்கள்.

26 ஆவது பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தினிடம் பரிவும் அன்பும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டார்கள். முதல்நாள் இரவு முதலே குருமூர்த்தத்தில் எழுந்தருளுவிக்கும் இடம் வரையிலும் கொட்டும் மழையையும் பாராட்டாது மிகுந்த ஆர்வத்தோடு இறுதியாக வணக்கம் தெரிவித்துக் கொண்டார்கள். ஆதீன ஹரிஜனங்கள் உள்ளிட்ட ஆதீனக் குடிமக்கள் ஆயிரக்கணக்கில்கூடி மலர்மாலையிட்டு வணங்கிக் கண்ணீர் மல்க நின்று கோஷமிட்ட நிகழ்ச்சி எல்லோரையும் உருக்குவதாக இருந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தில் பொதுவாக ஏழை எளியவர் என்றுது, பெரியோர் செல்வர்கள் என்றுது, எல்லோரிடமும் அவர்கள் நலத்தில் ஒரே நிலையில் கொண்டிருந்த அருள் நாட்டம் எவ்விதமிருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி பெரிதும் விளக்குவதாக அமைந்தது.

வானெலியார் ஏற்பாடு :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ காசியில் பரிபூரணமான செய்தியையும் அவ்வப்பொழுதும் என்னென்ன

நிகழ்ந்தது என்ற செய்தியையும் அகில இந்திய வானொலி நிலைய மும் தமிழ் ஆங்கிலச் செய்தித்தாள்களும் மக்களும் அறிவித்து வந்தன. அகில இந்திய வானொலி நிலையத்தில் 12—11—71 மாலை 6-30 மணிக்கு "அஞ்சலி நிகழ்ச்சி" ஒன்றும் ஏற்பாடு செய்து மிகச் சிறப்பாக ஒலி பரப்பினார்கள்

26 ஆவது குருமகாசந்நிதானம் :

26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமடத்துக்கு எழுந்தருளி அன்பர் களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

தற்போது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்கள். சென்னை சமயப்பிரசார நிலையத்தில் எழுந்தருளியிருந்து சமய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்கள். நிலையத்தில், தேவாரத் திருமுறை வகுப்பு, சித்தாந்த சாத்திர வகுப்பு, வடமொழி வகுப்பு, வித்துவான் வகுப்பு முதலியன நடைபெற ஆவன செய்தவர்கள். வார வழிபாட்டுக்கழகம் அமைத்து வழிபாடும், பல தலயாத்திரைகளும் மேற்கொண்டருளியவர்கள்.

திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் ஆலயத் திருப்பணியைத் தொடங்கி அன்பர் பலரது ஒத்துழைப்போடு நிறைவித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்ததோடு ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக குருபூஜை விழாக்காண ஏற்பாடு செய்தவர்கள். திருப் பெண்ணாகடத்தில் ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோயிலைப் புதுக்கிக் கும்பாபிஷேகம் செய்விக்கப் பெரிதும் முயன்றவர்கள். தமிழகத்தி லும், கடல் கடந்த இலங்கையிலும் நூற்றுக்கணக்கான சொற் பொழிவுகள் நிகழ்த்தி சமயப்பணி செய்தவர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் ஆதீனப் பணிகளைச் செவ்வன் இயற்றி முதன்மை பெற்றுத் திகழ்ந்தவர்கள்.

குருபூஜை விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருமேனி அடக்கம் செய்யப் பெற்ற (12—11—71) நாள் முதலாக அக்குருமூர்த்தத்திற்கு, காலை மாலை இருவேளைகளிலும் 26-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளுகின்றார்கள். 19—11—71 வெள்ளிக் கிழமை குருபூஜை விழா சிறப்பாக நடைபெறும்.

மகாசந்நிதானத்தின் திருவடி வெல்க! வாழ்க.

உ
சிவமயம்

அன்பின் வணங்கிப் போற்றுகிறேன்

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

அருமை பலவும் வாய்ந்தொளிரும் ஆன்ற தமிழும் சிவநெறியும்
பெருமை பிறங்கத் தொண்டுகள்தாம் பேணிச்செய்து போற்றி
உரிமை உடைய பெருஞ்சிறப்பில் ஓங்கியுயர்ந்து திகழுவது [வரும்
தரும புரநல் ஆதீனம் அளவில் அதன்சீர் சாற்றரிதால். 1

நானூ றுண்டு களுக்குமுனர் நல்ல குருஞா னசம்பந்தர்
ஆனோ றண்ணல் அருள்நெறிதான் அகில மெங்கும் தழைத்
[தோங்கித்
தேனேர் நம்செந் தமிழ்மொழியும் சிறந்தே ஓங்கிச் செழித்தொளி
தானேர் தனக்கே எனக்கண்ட தாகும் தருமை ஆதீனம். 2 [ரத்

அனைய சிறப்பின் ஆதீனத் தருள்சேர் குரவர் பலருள்ளும்
இனிய இருபத் தைந்தாக எண்ணும் முறையில் எழுந்தருளித்
துனியின் றரசு செலுத்தியநற் சுப்ர மண்ய தேசிகர்தம்
நனிநன் றுயர்ந்த அருளாட்சி நலன்கள் அனைத்தும் நவிலரிதால்

காட்சிக் கெளியர் கவின்வடிவர் கற்றோர்ப் போற்றும் பெருந்தலை
ஆட்சித் திறனும் அறிவாற்றல் அருளே முதலாம் பலவாய [வர்
மாட்சி எலாமும் ஒருங்கமைந்த மாத வத்தர்! மன நலத்தர்!
சேட்சி மிகுசீர்ச் சுப்ரமண்ய தேசிகர்தம் சிறப்பென்சொல்கேம் 4

புகழில் மிகும் நற் சுப்ரமண்யப் புனித குரவர் ஆட்சியின்கீழ்த்
திகழும் சிறந்த திருக்கோயில் இருபத்தேழும் செம்மைமிக
நிகழும் முறையும் மற்றவற்றின் தூய்மை நிலையும் திருப்பணிகள்
தகநன் றியற்றும் சால்புமெலாம் தகவோர் பலரும்புகழ்வனவாம்.5

முன்னாள் நந்தம் அப்பர் பிரான் முன்னிக்கண்ட கயிலை யினைப்
பின்னாள் போந்த நம்சமயப் பெரியோர் பலர்தாம் கண்டிலராால்
இந்நாள் அதனைச் சென்றுகண்டிங் கினிது போந்த குருமணி நீ
என்ன காசிக் கேகிநன்றே இறைவற் கலந்த எழிற் சிறப்பே. 6

தன்னேர் இல்லாத் தமிழ்ச்சைவச் சான்றோய்! கயிலைக்
குருமணியே!
என்னே நின்றன் பெருங்கருணை! எனையும் உவந்தாட்
கொண்டருளிப்
பொன்னேர் ஆடை போர்த்திச் 'சித் தாந்தப் புலவர் மணி'ப்
பட்டம்
இந்நாள் அளித்துச் சிறப்பித்தாய்; என்றும் நன்றி
பெரிதுடையேன். 7

(பின்பக்கம் பார்க்க)

GNANASAMBANDAM Regd. No. M. -
Suppliment to the Issue dated 10—11—71. as per P. M. G's order No. T C / N. 2948 d 16—11—71.

தளியில் நிகழும் விழாக்கள்பல தம்முள் இறைவன் அருள் நலத்தை
ஒளியில் உணர்த்தும் ஆவணிநல் மூல விழாவில், அருட்குரவ!
எளியல் நமக்கும் 'சித்தாந்தப் புலவர் மணி' என் றொருசிறப்பை
அளியின் அளித்தாய்; பெரும! நும்மை அன்பின் வணங்கிப்
போற்றுகின்றேன். 8

வேறு

வாழி கயிலைக் குருமணிதாள் மாட்சிமிக;
வாழிகுரு ஞானசம்பந் தர்மலர்த்தாள் - வாழியர்எம்
சண்முக தேசிகராம் சான்றோர்; புகழ்ந்தேத்த
விண்முகத்தோர் தாமும் வியந்து.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா :-

உள்நாடு ரூ. 3—00, வெளிநாடு ரூ. 6—00.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்
ஞானசம்பந்தம் காரியாலயம்,
தருமையாதீனம்
தருமபுரம், மாயூரம் P. O.

Printed & Published by, K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram) 19—10—71.